## சுங்க மேலதிக நேர மற்றும் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுங்க மேலதிக நேர மற்றும் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதியத்திற்கான ஐந்தொகையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 59,751,687 கூட்டுத்தொகையான 04 கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 208,706 தொகையான சேமிப்பு வைப்புக்களிலுள்ள முதலீடுகளின் பெறுமதி நிதியத்தின் ஒன்றிணைந்த ஐந்தொகையின் நிரலில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்ட 08 நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் மீதிகள் முறையே ரூபா 7,017,198 மற்றும் ரூபா 1,730,375 தொகைகளை இனங்கண்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2008 முதல் 2011 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக கணக்காய்வு அறிக்கைகளின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. அது தொடர்பாக அடுத்த ஆண்டில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிலும் அதனை சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 34,184,264 தொகையான மொத்த கடன்பட்டோர்களில் ரூபா 9,639,109 தொகை அதாவது 28.2 சதவீதம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதியாக இருந்ததுடன் இதில் ரூபா 24,545,155 தொகை அதாவது 71.8 சதவீதமானது 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாகக் காணப்பட்டது. அறவீடுகள் நிச்சயமற்ற நிலையில் இருந்த அம்மீதிகளுக்காக போதிய அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 7 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து காணப்படுகின்ற கடன்பட்டோரிடமிருந்து குறித்த தொகையை அறவிடுவதற்காக நடப்பாண்டிலும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடன்பட்டோராகக் காட்டப்பட்டிருந்த சில நிறுவனங்களின் உள்ளமை தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படவும் இல்லை.

(ஆ) நானாவித கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட 13 நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,816,630 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதியானது பலவருட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். அந்த 13 நிறுவனங்களினதும் விஷேட வைப்பாக ரூபா 2,946,461 தொகையான பொறுப்புக்கள் ஐந்தொகையில் காணப்பட்டதுடன் அந்த மீதியினை இனங்கண்டு தீர்த்து வைப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சில கடன்பட்டோர் மீதிகளுக்குரிய பிணை வைப்புக்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 விசேட வைப்புக்களும் முதலீடும்

1967 ஆம் ஆண்டு தொடக்கம் 75 நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 263,500 கூட்டுத்தொகையான ஆரம்ப வைப்புப் பணம், சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பெறப்பட்டிருந்த

வட்டி ரூபா 10,316,337 ஆக இருந்தது. இவ்வட்டி மற்றும் ஆரம்ப வைப்புப் பணத்தின் கூட்டுத்தொகையான ரூபா 10,579,837 தொகை மீளாய்வாண்டின் ஐந்தொகையில் விசேட வைப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு காரணியாக இருந்த நோக்கங்கள் தொடர்பாக எழுத்து மூலத் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வைப்புக்கள் பெறப்பட்ட நிறுவனங்களின் உளமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அவ் வைப்புக்கள் மீளச் செலுத்தப்பட வேண்டியவையா என்பதும் உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) பல வருட காலமாக இப்பணம் சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் மிகவும் குறைவான வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் உரிய பணம் ஏனைய பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்கள் அவற்றிற்கு முன்னால் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | சில்லறைக் கடன்பட்டோர் | 34,184,264 | 158 நிறுவனங்களில் நிலுவையாகக் காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகளுக்கு உரித்தான மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | 08 கணக்கு விடயங்கள் | 8,747,573 | மீதி உறுதிப்படுத்தல்கள் |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் | |
| நி.பி. 175(2) | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 34,184,264 நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 9/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2010 பெப்ரவரி 19 ஆம் திகதிய 01/2010 ஆம் இலக்க இலங்கை சுங்க திணைக்களத்தின் சுற்றறிக்கை | இலங்கை சுங்கத்தினால் நேரப் பதிவு இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தரும் நேரப் பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்தியிராததுடன் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.7 அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை சுங்கத்தின் உத்தியோகத்தர்களக்கு நாளொன்றிற்கு 12 முதல் 27 மணித்தியாலங்கள் வரையான காலப்பகுதிக்காக மாதமொன்றிற்கு 600 மணித்தியாலங்களை மிகைத்து மேலதிக கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறும் வகையில் முறையற்ற விதத்தில் உள்ளகப் பிரமாணங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காகப் பெறப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 145,587,707 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 171,182,085 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 25,594,378 ஆன வீழ்ச்சியினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதியத்தின் வருமானம் 2.7 சதவீதத்தினால் குறைவடைந்தமையும் செலவினங்கள் 2.4 சதவீதத்தினால் அதிகரித்தமையும் இவ்வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (அ) மேலதிக நேர நிதியம்

சுங்க உத்தியோகத்தர்களின் வழமையான கடமைநேரத்திற்கு மேலதிக காலத்தின் போதும் கடமைக்காக சுங்கம் மூடப்பட்டிருக்கும் நாட்களில் கடமைகளை மேற்கொள்வதற்காக செலவிடப்படும் செலவினத்தை ஈடு செய்வதற்கு வெளியிலுள்ள பகிர்வு நிலையங்கள் மற்றும் ஏனைய நிறுவகங்களில் மேலதிக நேரமாக அறவிடப்படும் பணம் இந் நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் இதில் மேலதிக நேர சேவைகளுக்காக சுங்கப் பதவியணியினருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் இந் நிதியத்தின் செலவினமாக கருதப்படும்.

2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டு மற்றும் முன்னைய 09 ஆண்டுகளுக்கு உரிய மேலதிக நேர நிதியத்தின் நிதி விளைவுகள் தொடர்பான பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | வருமானம் | செலவினம் | மிகை | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் முன்னேற்றம்/ (வீழ்ச்சி) சதவீதமாக | வருமானத்தின் சதவீதமாக மிகைகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| 2003 | 314.442 | 257.511 | 56.931 | - | 18.11 |
| 2004 | 336.786 | 302.717 | 34.069 | (40.15) | 10.12 |
| 2005 | 381.696 | 367.750 | 13.946 | (59.06) | 3.65 |
| 2006 | 490.012 | 384.789 | 105.223 | 654.52 | 21.47 |
| 2007 | 576.415 | 425.920 | 150.495 | 43.02 | 26.11 |
| 2008 | 576.671 | 424.275 | 152.396 | 1.26 | 26.43 |
| 2009 | 465.837 | 410.236 | 55.602 | (64) | 12.00 |
| 2010 | 583.491 | 416.289 | 167.202 | 200 | 28.64 |
| 2011 | 593.065 | 421.883 | 171.182 | 2.38 | 28.86 |
| 2012 | 577.392 | 431.805 | 145.587 | (14.95) | 25.21 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை சுங்க பதவியணியினருக்காக மீளாய்வாண்டின் போது மேலதிக நேர நிதியத்தினால் மேலதிக நேரச் செலவினம் செலவிடப்படுகையில் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் எற்பட்ட மேலதிக நேரக்கிரயமாக ரூபா 2,597,260 தொகை செலவிடப்பட்டிருந்த போது மேலதிக நிதியத்தின் மிகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியம்

சுங்க உத்தியோகத்தர்களினால் வழமையான கடமை நிலையங்களுக்கு வெளியே உள்ள சூழலில் பரிசோதனை கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்காக, பொருட்கள் தீர்வை செய்யும் தரப்பினர்களினால் அறவிடப்படும் பரிசோதனைக் கட்டணத்தில் 50 சதவீதம் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டண நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தொகை உத்தியோகத்தர்களுக்கு படிப்பணக்

கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 200,913,004 தொகை இந்நிதியத்திற்கு பெறப்பட்டிருந்ததுடன் முன்கொண்டுவரப்பட்ட மீதி உட்பட முழுத்தொகை ரூபா 452,982,826 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட செலவினம் ரூபா 161,995,774 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 252,069,822 தொகையான நிதியத்தின் வைப்பின் அளவு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 290,987,052 வரை அதிகரித்திருந்தது.

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சுங்கத்தின் மேலதிக நேரக் கொடுப்பனவு நடைமுறைகள் சர்ச்சைக்குரிய தன்மையில் இருந்தமை முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் பொருத்தமற்ற வகையில் மேலதிக நேரக் கொடுப்பனவுக் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2012 சனவரி முதல் மார்ச் வரையான 03 மாத காலப்பகுதியில் இறக்குமதிப் பிரிவில் 06 உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது ஒவ்வொரு மாதத்திற்காகவும் சகல உத்தியோகத்தர்களுக்கும் 600 மணித்தியாலங்கள் முதல் 663 மணித்தியாலங்கள் வரையான வீச்சில் மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே ஒவ்வொரு மாதத்திலும் அந்தந்த உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவின் அளவு ரூபா 27,499 முதல் ரூபா 33,393 வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்கள் மாதத்தின் சகல நாட்களிலும் செய்கின்ற மேலதிக நேரத்தின் அளவு சராசரியாக நாளொன்றிற்கு 20 மணித்தியாலத்தை விஞ்சியிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்டதன் பிரகாரம் மேலதிக நேரக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிகளுக்காகவும் அந்த உத்தியோகத்தர்களுக்கு கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணமும்

அசாதாரணமான முறையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக 08 உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 21,678 முதல் ரூபா 29,421 வரையான வீச்சில் மாதாந்த மேலதிகப் படி செலுத்தப்பட்டிருக்கும் போது அந்த மாதத்திற்காகவும் ரூபா 44,680 முதல் ரூபா 89,246 வரையான வீச்சில் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணத் தொகை செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. சில உத்தியோகத்தர்களுக்கு ஒரு மாதத்தின் போது ரூபா 128,000 தொகையையும் விஞ்சி கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

(இ) பிணைமுறிகள் மற்றும் பிரயாணப் பொதிகள் போன்ற பிரிவுகளில் 2012 பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் வரையான மாதங்களில் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணக் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2013 ஒக்தோபர் வரை உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளில் இறக்குமதிப் பிரிவிற்குரிய தகவல்கள் கணனியில் இருந்து அழிந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போதும் இந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணமாக 2008 முதல் 2011 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட ரூபா 762,969,822 கூட்டுத்தொகையும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 161,995,774 கூட்டுத்தொகையும் சரியானதா என பரிசோதனைக்கு உள்ளாக்க முடியாதிருந்தது.

(ஈ) மேற்கூறப்பட்டதன் பிரகாரம் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளம், ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் வெகுமதித் தொகை என்பவற்றிற்கு மேலதிகமாகவே மேலதிக நேரப் படிகள் மற்றும் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணக் கொடுப்பனவுகள் என்பன செலுத்தப்பட்டிருந்தன. அநேகமான உத்தியோகத்தர்களின் மேலதிக நேர உழைப்பு மாதாந்த திரட்டிய சம்பளத்திற்கு மேற்பட்டே காணப்பட்டது. அநேகமான உத்தியோகத்தர்கள் வருடம் முழுவதும் விடுமுறை பெற்றுக்

கொள்ளாமல் சேவையாற்றியதன் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது சாத்தியமற்றதாகும்.

(உ) மேலே காண்பிக்கப்பட்ட நிலைமைகளை முறைமைப்படுத்துவதற்காக மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் கொள்கலன் பரிசோதனைக் கட்டணம் தொடர்பாக காலங்கடந்த பிரமாணங்கள் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதியத்தின் பயன்படுத்தப்படாத பணத்தொகை திறைசேரி வைப்பாக ஒவ்வொரு ஆண்டின் போதும் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் இவ் வைப்புக்கணக்கின் மீதி மற்றும் நிதியத்தின் மீதி என்பன கீழே காண்பிக்கப்பட்டவாறு விருத்தியடைவதைக் காட்டுகின்றது. இம்மீதி தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | மேலதிக நேர நிதியம் | கப்பல் சரக்கு பரீட்சிப்புக் கட்டண நிதியம் | திறைசேரி வைப்புக் கணக்கு மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2005 | 28,007,949 | -- | 28,007,949 |
| 2006 | 254,940,825 | 93,672,857 | 348,613,682 |
| 2007 | 451,423,786 | 157,259,952 | 608,683,738 |
| 2008 | 616,810,938 | 246,576,326 | 863,387,264 |
| 2009 | 669,350,013 | 322,004,787 | 991,354,800 |
| 2010 | 849,082,264 | 369,645,856 | 1,218,728,120 |
| 2011 | 1,022,822,795 | 252,069,822 | 1,274,892,617 |
| 2012 | 1,176,009,046 | 290,987,052 | 1,466,996,098 |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டின் பிரகாரமான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் கண்டறியப்பட்டமையால் பாதீடு அக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலுவை வருமானம்

(ஆ) மேலதிக நேரக் கொடுப்பனவு

(இ) கணக்கீடு

(ஈ) கொள்கலன் பரீட்சிப்பு நடவடிக்கைகள்

(உ) பதவியணியினர் கட்டுப்பாடு